***அனைத்து அரசு/ நகரவை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கவனத்திற்கு,***

**அரசு/ நகரவை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் தற்காலிக அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்ய பெறப்பட்ட விண்ணப்பங்களை, தகுதியின் அடிப்படையில் கீழ்கண்ட வழிமுறைகளின்படி பின்பற்றுமாறு அனைத்து அரசு /நகரவை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**விண்ணப்பிப்பவர், பட்டதாரி ஆசிரியராக இருப்பின் விண்ணப்பத்துடன் கீழ்கண்ட சான்றிதழ்களின் நகல்கள் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.**

- **B.A./B.Sc. பட்டச்சான்று நகல் ( Xerox copy of Convocation Certificate)**
- **Xerox Copy of B.Ed. Degree Certificate**
- **Xerox Copy of TET Passed Certificate**

**விண்ணப்பிப்பவர், முதுகலை ஆசிரியராக இருப்பின் விண்ணப்பத்துடன் கீழ்கண்ட சான்றிதழ்களின் நகல்கள் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.**

- **B.A./B.Sc. பட்டச்சான்று நகல் ( Xerox copy of Convocation Certificate)**
- **M.A./M.Sc. (Same Subject) பட்டச்சான்று நகல் ( Xerox copy of Convocation Certificate)**
- **Xerox Copy of B.Ed. Degree Certificate**
- **C.V. (Certificate Verification) கலந்தகொண்டதற்கான சான்றின் நகல் இணைக்கப்படவேண்டும்.**
- **ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் தேவைப்படின் சார்ந்த பட்டதாரி ஆசிரியர் அல்லது முதுகலை ஆசிரியர் ITK-ல் (இல்லம் தேடிக் கல்வி) பணிபுரிவராக இருப்பின் அவர்களது விண்ணப்பங்களை ITK-ல் பணிபுரிவதற்கான சான்றிதழின் நகலுடன் மேற்குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.**
- **ITK மூலமாகவும் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடின் அந்த ஊரில் உள்ள அல்லது அருகாமையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை மேல் குறிப்பிடப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படலாம்.**

**தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை முதன்மைக்கல்வி அலுவலரின் ஒப்புதல் பெற 18.07.2022 (திங்கள் கிழமை) காலை 11.00 மணிக்குள் முதன்மைக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கும்படி அனைத்து அரசு/நகரவை உயர் மற்றும்**

மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும் ஆணைகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டி உள்ளதால் தலைமையாசிரியர்கள் மிகுந்த கவனத்துடன் மேற்குறிப்பிட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில் எந்தவித புகாருக்கும் இடமின்றி தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தவறும் பட்சத்தில் சார்ந்த பள்ளி தலைமையாசிரியரே முழு பொறுப்பேற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-க.முனுசாமி
முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்